**மேல்முறையீட்டு வழக்கு எண்: 19/2023**

The Witness sweared under Oaths Act 1969 on this the day of 10th day of July 2025

**ம.சா.1 ராஜாமணி த/பெ. ஜானகிராமன்,**

**எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

நான் 1962ம் வருடம் 8ம் வகுப்பு படித்துள்ளேன். நான் இந்த மேல்முறையீட்டில் இரண்டு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் மா.சா.ஆ.1ல் பட்டா எண் 127ன் உண்மை நகல் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். ம.சா.ஆ.2 சிறுவழக்கு எண் 327/1971 வழக்கு பதிவேடு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்கண்ட இரண்டு ஆணங்கள் தவிர்த்து வேறு ஆவணங்கள் எதுவும் நான் இந்த மேல்முறையீட்டில் தாக்கல் செய்யவில்லை. பட்டா எண் 127 எந்த வருடத்திற்கான சிட்டா என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். ம.சா.ஆ.1 ஆனது 1389 பசலிக்கானது என்றும் 1980க்கானது என்றால் அது எனக்கு தெரியாது. ம.சா.ஆ.1ல் ராஜலட்சுமி பெயரோ அல்லது அவரது கணவரின் பெயரோ அல்லது அவரது சகோதரர் பெயரோ குறிப்பிடவில்லை என்றால் எனக்கு தெரியாது. ம.சா.ஆ.1 ஆனது சின்னய்யா பிள்ளை, முருக கவுண்டர், ரங்கசாமி, பச்சையப்பன், கணேசன், ஏழுமலை ஆகியோர் பெயரில் உள்ளது என்றால் எனக்கு தெரியாது. தாவா 1 மற்றும் 2 வது ஐட்ட சொத்துகள் அதில் குறிப்பிடப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. ம.சா.ஆ.1 எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்று எனக்கு தெரியாது. என் அம்மாவிற்கு தான் தெரியும். ம.சா.ஆ.1 இந்த வழக்கில் ஏற்றுக்கொள்ள தக்கது அல்ல என்றால் சரியல்ல. ம.சா.ஆ.2 மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் ஆரணி அசல் வழக்கு எண் 327/1971 வழக்கின் வழக்கு பதிவேடு நகல் என்றால் எனக்கு தெரியாது. எனது அம்மாவிற்கு தான் தெரியும். ம.சா.ஆ.1 மற்றும் ம.சா.ஆ.2 குறித்து எனக்கு எந்த கவனமும் கிடையாது. நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ.1 மற்றும் ம.சா.ஆ.2 இந்த வழக்கிற்கு சம்மந்தம் இல்லை என்றும் அதனால் அது ஏற்றுக்கொள்ள தக்கது அல்ல என்றால் சரியல்ல. இந்த மேல்முறையீடு நடத்துவதற்கு எனக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. இந்த மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முழுமையாக முடிக்கப்பட்டது. மறு விசாரணை இல்லை.**

| | |
|---|---|
| சாட்சியின் கையொப்பம் | திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்<br><br>Sd/- S. Senthilbabu,<br>சார்பு நீதிபதி,<br>போளூர். |